DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 128/2022 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 1 |
| Name | சுப்புராஜ் |
| Father / Husband Name | செருவலிங்கம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 24th April 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் ஈசனூரில் குடியிருந்து வருகின்றேன். நான் கூலி வேலை செய்து வருகின்றேன். என் உடன் பிறந்த தம்பி பெயர் பூவலிங்கம். சம்பவத்தில் இறந்த வினோதினி என் உடன் பிறந்த தம்பியின் மனைவி ஆவார். என் தம்பிக்கு கோகுல்ராஜ், லிங்கேஸ்வரன் என்ற இரண்டு ஆண் பிள்ளைகள். கடந்த 03.11.2021ம் தேதி தீபாவளி பண்டிக்கைக்காக ஈசனூரில் இருந்த பாகனேரிக்கு அருகில் இருந்த நெப்புகப்பட்டி என்ற கிராமத்தில் வினோதியின் பெரியம்மா செல்வி வீட்டில் இருந்த லிங்கேஸ்வரனை கூப்பிடுவதற்காக வினோதினியும், கோகுல்ராஜும் Honda Activa TN 63 6584 என்ற இருசக்கர வாகனத்தில் சென்று விட்டு லிங்கேஸ்வரனை கூட்டிக்கொண்டு

வினோதினியும், கோகுல்ராஜும், லிங்கேஸ்வரனும் அதே வாகனத்தில் வந்த போது திருப்பத்தூர் - சிவகங்கை பைபாஸ் ரோட்டில் ஒக்கூர் அண்ணா நகரில் பள்ளிக்கூடம் எதிரே உள்ள பஸ் ஸ்டாப் அருகே வந்துகொண்டிருந்த போது மாலை 06.00 மணியிருக்கும் அப்போது நான் TVS XL வாகனத்தில் வினோதியின் வாகனத்தின் பின்னால் வந்து கொண்டிருந்தேன்.

2) அப்போது எனக்கும்,அவர்களுக்கும் முன்னும் பின்னுமாக TN 63 N 1265 அரசு பேருந்து அதிவேகமாகவும், ஹாரண் அடிக்காமலும் வந்த வாகனம் வினோதினி சென்ற வாகனத்திற்கு பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தியது விபத்தை ஏற்படுத்திய நபரை நான் பார்த்தேன். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். இன்றைய தினம் விபத்தை ஏற்படுத்திய நபர் நீதிமன்றத்திற்கு வரவில்லை.

3) அந்த விபத்தில் அரசு பேருந்தின் முன்புறம் உள்ள வலது பக்க வீல் வினோதியின் மீது ஏறி இறங்கியதில் வினோதியின் தலையிலும், உடம்பிலும் காயம் ஏற்பட்டு மூளை வெளியே வந்துவிட்டது. சம்பவ இடத்திலேயே வினோதினி, லிங்கேஸ்வரன் இறந்துவிட்டார்கள். கோகுல் ராஜுக்கு காலிலும், இடுப்பிலும் பலத்த காயம் ஏற்பட்டு இது நாள் வரை சிகிச்சை எடுத்து வருகிறார். தற்சமயம் கோகுல்ராஜுக்கு 12 வயதிருக்கும்.

4) 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து விபத்தில் இறந்த நபர்களையும், காயம்பட்டவர்களையும் குமார், கார்த்திக் உதவியுடன் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இந்த விபத்து சம்பந்தமாக நான் தான் விபத்தை ஏற்படுத்திய ஓட்டுநர் மீது சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் சொல்ல சொல்ல காவல் நிலையத்தில் இருந்த போலிசார் புகாரை எழுதினார். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 24.04.2023
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**